## *பங்கேற்றோர் பின்னணி*

ஆய்வில் பங்கேற்றோரில் ஆண்கள் - 60.0, பெண்கள் - 40.0. வயதுரீதியாக: வயது 30 வரை - 28.9, வயது 31 முதல் 45 வரை - 31.0, வயது 46 முதல் 60 வரை - 32.4 (மீதி - வயது 60-க்கு மேல்). *கல்விரீதியாக*, படிக்காதவர்கள் மற்றும் ஆரம்பக் கல்விவரை - 28.9, வகுப்பு 6 முதல் 12 வரை - 47.2, கல்லூரி அல்லது தொழிற்கல்வி - 23.9. *தொழில்ரீதியாக,* கூலி வேலை மற்றும் மீன்பிடித் தொழில் - 24.6, சொந்தத் தொழில் செய்வோர் - 24.0, தனியார் நிறுவனங்களில் பணிபுரிவோர் - 13.4, அரசு ஊழியர் - 5.6, இல்லத்தரசிகள் - 21.8, மாணவர்கள் - 4.2 (மீதி - பிற தொழில்கள் / வேலையில்லாதோர்). *சாதிரீதியாக,* தாழ்த்தப்பட்டோர் - 31.7, மிகவும் பிற்படுத்தப் பட்டோர் - 34.5, பிற்படுத்தப்பட்டோர் - 29.6 (மீதி - பிற (உயர்) சாதியினர் / தகவல்தர விரும்பாதோர்). *மதரீதியாக,* இந்துக்கள் - 90.1, இஸ்லாமியர் - 3.5, கிறிஸ்தவர் - 6.3 (மீதி - பிற மதத்தினர் / பதில் தெரிவிக்காதோர்).

## *ஆய்வு முடிவுகள்*

***(1) அரசியல் செய்திக்கான ஊடகம்:*** அரசியல் குறித்த செய்திகளுக்கு ரா.கி.நகர் தொகுதி மக்களில் ஏறத்தாழ நான்கில் மூவர் (73.9) தொலைக்காட்சியையே சார்ந்துள்ளனர். அச்சடிக்கப்பட்ட செய்தித்தாள்கள் வழியாகத் தெரிந்துகொள்வோர் - 12.7. மிகச் சிறிய அளவினருக்கே கைபேசி (6.3) மற்றும் மேசை/மடிக் கணினி (0.7) முதன்மையான அரசியல் செய்தி ஊடகமாக உள்ளன. மீதி - அரசியல் செய்திகளில் ஆர்வமில்லாதவர்கள்.

மேலுள்ள செய்தி நுகர்வுக்கான ஊடகப் பயன்பாடு இரு செய்திகளை வெளிப்படுத்துகிறது. (அ) ரா.கி.நகர் தொகுதி மக்கள் மீது தொலைக்காட்சி அபரிமிதமான தாக்கத்தை ஏற்படுத்தும் சாத்தியம். (ஆ) சில அரசியல் கட்சிகளும் கருத்தாளர்களும் சமூக ஊடகங்களுக்கு (social media) தரும் அரசியல் முக்கியத்துவம் மிகைப்படுத்தப்பட்டதாக உள்ள நிதர்சனம். தமிழக அளவில் இவை குறித்த விரிவான ஆய்வை மக்கள் ஆய்வு முன்னெடுத்துள்ளது.

***(2) பிரச்சாரப் பொருளாக ஜெ. மரணம்:*** மறைந்த முதல்வர் ஜெயலலிதாவின் மரணம்/பிணம் பிரச்சாரப் பொருளாகியிருப்பது தேர்தல் முடிவில் தாக்கத்தை ஏற்படுத்தும் என உறுதியாகக் கருதுவோர் 22.1. ஓரளவு என்போர் 10.4. இத்தகைய பிரச்சாரத்தால் அதிமுக-வின் இரு அணிகளுமே ஏறத்தாழச் சம அளவில் பாதிக்கப்படும் என்பதே இவர்களது கருத்து (அம்மா அணிக்குப் பாதிப்பு - 13.9, புரட்சித்தலைவி அம்மா அணிக்கு - 14.3, தீபாவுக்கு - 3.1, திமுக-வுக்கு - 1.2).

பிரச்சாரத்தின் தொடக்க நிலைகளில் ஊடகங்களின் கவனத்தை ஈர்ப்பதாகவும், அதிமுக-புரட்சித்தலைவி அம்மா அணியின் பெரும் பலமாகவும் சித்தரிக்கப்பட்ட “மரண மர்ம”த்தின் தாக்கம், பிரச்சாரத்தின் போக்கில் வேறு காரணிகள் (குறிப்பாகக் “கவனிப்பு”) இடையிட்டதால் நீர்த்துப்போய்விட்டது. அந்த அணியினர் நடத்திய “பிண ஊர்வலம்” பலருக்கு அருவருப்பை மூட்டுவதாக அமைந்துவிட்டதும் தாக்கம் நீர்த்துப்போக ஒரு காரணம்.

***(3) வாக்குக்குப் பணம்:*** பிரச்சாரம் அதன் உச்சத்தை எட்டிவரும் இந்தக் கடைசி சில நாள்களில் தொகுதி முழுவதும் மக்களின் பேசுபொருளாகத் திகழ்வது பணம் - பணம் விநியோகிக்கும் கட்சிகள், விநியோகிக்கும் உத்திகள், வந்த தொகை, வரவேண்டிய தொகை, அதையொட்டிய வேண்டுதல், விவாதம், விவகாரம் என பணத்தைச் சுற்றியே தொகுதி இயங்குகிறது. வாக்களிக்கும் முடிவைத் தீர்மானிக்கும் காரணிகளாகச் செயல்படும் சாதி, கட்சி, மதம், சினிமா/ஊடகம், தொகுதியின் தேவைகள் முதலிய முக்கிய காரணிகளைக் கீழ்ப்படுத்தி, மேலாண்மை பெற்ற காரணியாக (supervening variable) முகிழ்த்துள்ளது “பணம்” என்ற காரணி.

வாக்குக்குப் பணம் தரப்படும் கள எதார்த்தம் நிச்சயம் தேர்தல் முடிவைப் பாதிக்கும் எனப் பெரும்பாலோர் (65.3) நம்புகின்றனர். ஓரளவு தாக்கம் இருக்கலாம் என்போர் 15.5. இந்த இருசாராரின் கருத்துப்படி, பண விநியோகம் அதிமுக-அம்மா வேட்பாளருக்கு அதிக சாதகமாகவும் (38.8), அதற்கடுத்த நிலையில் திமுக வேட்பாளருக்குச் சாதகமாகவும் (29.5) அமையும் சாத்தியமுள்ளது.

இதனால் அதிமுக-புரட்சித்தலைவி அம்மா வேட்பாளருக்கு குறிப்பிடத்தக்க பலன் எதுவுமில்லை (சாதகம் - 8.7 மட்டும்). (எம்ஜிஆர்-அம்மா-தீபா பேரவை வேட்பாளருக்கு - 2.6 மட்டுமே.)

***பண விநியோகம் குறித்து நேர்காணலின் போது வெளிப்பட்ட தொகுதி மக்களின் மனநிலைகள்:***

**மனநிலை 1:** "குடுக்குறாங்க, வாங்கிக்கிறதுல என்னா தப்பு...?"

**மனநிலை 2:** "ஓட்டுப் போட்ட பிறகு எதுவும் நடக்கப்போறதில்ல, அதுக்கு இப்பவாவது இத வாங்கிக்கலாமே..."

**மனநிலை 3:** "இதென்னா அவுங்க அப்பன்வீட்டுச் சொத்தா? நம்மட்ட கொள்ளையடுச்சதுதான...? அத ஏன் வாங்கிக்கக் கூடாது...?

**மனநிலை 4:** "தர்றவங்கட்ட பணத்த வாங்கிட்டு, நமக்குப் புடுச்சவங்களுக்கு ஓட்டுப் போட்டுக்கலாமே..."

**மனநிலை 5:** "இதுனால கருப்புப் பணமெல்லாம் புழக்கத்துக்கு வருது. இது பொருளாதாரத்துக்கு நல்லதுதான...?"

இப்படி, நேர்காணலின் போது மக்கள் முன்வைத்த காரணங்கள் எல்லாமே பண விநியோகத்தை நியாயப்படுத்துவதாகவே அமைந்துள்ளன.

***(4) இன்று வாக்களித்தால்...:***

தொகுதி மக்களின் ஏகோபித்த வரவேற்புக்கும் எதிர்பார்ப்புக்கும் உரித்தானதாகப் பணம் திகழும் தற்போதைய சூழலில், இன்று வாக்களிப்பதாக இருந்தால் அதிமுக-அம்மா வேட்பாளருக்கு, அடுத்துவரும் திமுக வேட்பாளரைவிட ஏறத்தாழப் பத்து விழுக்காடுப் புள்ளிகள் அதிக ஆதரவு வெளிப்படுகிறது. அதிமுக-அம்மா - 35.4., திமுக - 25.9 , அதிமுக-புரட்சித்தலைவி அம்மா - 20.6, நாம் தமிழர் - 3.4, எம்ஜிஆர்-அம்மா-தீபா பேரவை - 2.3, சிபிஎம் - 1.7, தேமுதிக - 1.1, பாஜக - 0.6, பிறர் - 1.7, நோட்டா - 6.9

***(5) தேர்தல் ஆணையத்தின் செயல்பாடு:*** துப்பாக்கி ஏந்திய மத்திய பாதுகாப்புப் படைகள், பறக்கும் படைகள், கூடுதல் பார்வையாளர்கள், தேர்தலை நடத்த சிறப்பு அதிகாரி, நுண் பார்வையாளர்கள், கண்காணிப்பு கேமராக்கள், விழிப்புணர்வு பிரச்சாரங்கள்.... என, கடந்த தேர்தல்களில் இல்லாத அளவுக்குப் பல நடவடிக்கைகளைத் தேர்தல் ஆணையம் எடுத்தபோதும், பத்தில் ஒருவருக்கு (10.5) ஆணையம் பற்றி எதுவுமே தெரியவில்லை. ஒட்டு மொத்தமாக, அதன் செயல்பாடுகளுக்குப் பாராட்டை விடக் கண்டனம் அதிகமாக வெளிப்படுகிறது. செயல்பாடு மிக நன்று - 6.4, நன்று - 12.1, சராசரி - 17.7, மோசம் - 25.6, மிக மோசம் - 26.7.

சென்னை பத்திரிகையாளர் மன்றம்
அரசினர் தோட்டம், சென்னை 600 002

பேரா. டாக்டர் ச. ராஜநாயகம்
& 'CON' குழுவினர், மக்கள் ஆய்வு
10 ஏப்ரல் 2017

*கவனத்திற்கு:* (1) மக்கள் கருத்துக்களைத் தெரிவிக்கப் பயன்படுத்தியுள்ள எண்கள் அனைத்தும் சதவீதத்தைக் குறிக்கின்றன. (2) கேள்விக்கான பதில்களில் முக்கியமானவை மட்டும் பட்டியலிடப் பட்டுள்ளதால், சதவீதங்களின் கூட்டுத்தொகை 100-ஐ விடக் குறைவாக இருக்கலாம்.

© People Studies, April 2017. No part / aspect of this Research Report may be used for purposes other than genuine journalistic reporting without written permission from People Studies.

